<u>சுருக்கம்</u>

நெடுஞ்சாலைத் துறை – தஞ்சாவூர் மாவட்டம் – 2004–ஆம் ஆண்டு மார்ச் திங்களில் நடைபெற உள்ள மகாமகம் திருவிழாவை முன்னிட்டு கும்பகோணம் நகரைச் சுற்றியுள்ள இதர மாவட்ட சாலைகளை (Other District Roads) மேம்பாடு செய்வதற்கு நிர்வாக ஒப்புதல் அளித்தல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலைத் (எச்.எப்1) துறை

அரசாணை (நிலை) எண். 190 நாள் 15.9.2003

<u>படிக்கவும்:–</u>

தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் கடித எண். 1239/வ.செ.2./2003 நாள் 5.9.2003

----

<u>ஆணை:–</u>

கும்பகோணத்தில் நடைபெறவுள்ள மகாமகம் திருவிழாவிற்கான ஏற்பாடுகள் குறித்து 5.9.2003 அன்று அரசு அளவில் விவாதிக்கப்பட்டது. அப்போது கும்பகோணம் நகரைச் சுற்றியுள்ள இதர மாவட்ட சாலைகளை, திருவிழாவிற்கு வருகை புரியும் பொதுமக்களின் நலன் கருதி மேம்பாடு செய்ய கருதப்பட்டது. இதனையடுத்து, இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ளவாறு கும்பகோணம் நகரைச் சுற்றியுள்ள 10 இதர மாவட்ட சாலைகளை ரூ. 2.40 கோடி செலவினத்தில் மேம்பாடு செய்ய தலைமைப் பொறியாளர் (பொது) செயற்குறிப்பு ஒன்றினை அரசுக்கு அனுப்பியுள்ளார். மேம்பாடு செய்ய கருதப்பட்டுள்ள சாலைகளின் நீளம் 39.20 கி.மீ. ஆகும். இதற்கான செலவினத்தை இதர மாவட்ட சாலைகளின் மேம்பாட்டிற்கான டிட்கோ பத்திர வெளியீட்டு (TIDCO BOND) மூலம் பெறப்பட்ட தொகையில் மீதமுள்ள தொகையிலிருந்து ஈடு கட்டிக் கொள்ள கருதப்பட்டுள்ளது. இதனால், தலைமைப் பொறியாளரின் செயற்குறிப்பிற்கு நிர்வாக அனுமதி மட்டும் அளித்தால் போதுமானது.

2. மேற்கூறிய சூழ்நிலையில், தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் செயற்குறிப்பை ஏற்று, கும்பகோணம் நகரில் நடைபெறவுள்ள மகாமகம் திருவிழாவை முன்னிட்ட கும்பகோணம் நகரைச் சுற்றியுள்ள இதர மாவட்ட சாலைகளை ரூ.2.40 கோடி (ரூபாய் இரண்டு கோடியே நாற்பது இலட்சம் மட்டும்) செலவினத்தில் மேம்பாடு செய்ய நிர்வாக அனுமதியும் மற்றும் இச்செலவினத்தை "8443 "Civil Deposit Class 177" தலைப்பில் மீதமுள்ள தொகையிலிருந்து ஈடுகட்டிக் கொள்ளவும் ஒப்புதல் அளித்தும் அரசு ஆ ணையிடுகிறது.

3. இவ்வரசாணை நிதித்துறை ஒப்புதலுடன் அத்துறையின் அ.சா.கு. எண். 3054/எப்.எஸ்/ப்பி/2003 நாள் 12.9.2003 ன் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே.எஸ். ஸ்ரீபதி,
அரசு செயலாளர்.

பெறுநர்

தலைமைப் பொறியாளர் (பொது) நெடுஞ்சாலை, சென்னை–5
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–79
மாநில கணக்காயர்,. சென்னை–18.
மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர்.

<u>நகல்:–</u>

நிதி (பொதுப்பணி) துறை , சென்னை–9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.